செய்தி வெளியீடு எண்: 744 நாள்: 16.10.2018

# <u>செய்தி வெளியீடு</u>

## <u>நுண்ணீர்ப் பாசன அமைப்புகள் மூலம் சாகுபடி மேற்கொள்ளும் விவசாயிகளை ஊக்குவிப்பதற்காக குழாய்க்கிணறு / துளைக்கிணறு, ஆயில் இன்ஜின் / மின்மோட்டார், நீர்பாசன குழாய் மற்றும் தரைநிலை நீர்த் தேக்கத் தொட்டி அமைப்பதற்கு மானியம் வழங்குதல் தொடர்பான செய்தி வெளியீடு</u>

தமிழ்நாட்டில், கிடைக்கும் பாசன நீரினை சிக்கனமாக பயன்படுத்தி, குறைந்த நீரில் அதிக பரப்பில் சாகுபடி மேற்கொண்டு விவசாயிகள் அதிக விளைச்சல் பெற வேண்டும் என்ற நோக்கத்தில், சொட்டு நீர் மற்றும் தெளிப்பு நீர்ப் பாசனம் போன்ற நுண்ணீர்ப் பாசன முறைகளை தமிழக விவசாயிகளிடையே பிரபலப்படுத்துவதற்காக தமிழ்நாடு அரசு பல்வேறு சீரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. **அதன் ஒரு பகுதியாக 2011 ஆம் ஆண்டு முதல் நுண்ணீர் பாசன அமைப்புகளை உருவாக்குவதற்கு சிறு குறு விவசாயிகளுக்கு முழு மானியமும், பிற விவசாயிகளுக்கு 75 சதவிகித மானியமும் அளித்து வருகிறது. இதுவரை, தமிழ்நாட்டில் பத்து இலட்சம் ஏக்கருக்கும் அதிகமான நிலங்களில் நுண்ணீர்ப் பாசன அமைப்புகள் ரூ. 1,500 கோடி மானியத்தில் உருவாக்கி விவசாயிகள் பயனடைய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.**

பாசன நீர் வசதி இல்லாத இடங்களில் பாசன நீர் ஆதாரங்களை உருவாக்கி, விவசாயிகள் நுண்ணீர்ப் பாசன முறையில் சாகுபடி மேற்கொள்வதற்கு 2018–19 ஆம் ஆண்டில் பிரதம மந்திரி விவசாய நீர் பாசனத்திட்டத்தில் ‘‘ஒரு துளி நீரில் அதிக பயிர்’’ எனும் மத்திய மாநில அரசு திட்டத்தின் கீழ் மாண்புமிகு அம்மாவின் அரசு ரூ.45 கோடியே 71 இலட்சம் நிதியினை ஒதுக்கி, அதற்கான அரசாணையினை கடந்த 3.10.2018 அன்று வெளியிட்டுள்ளது.

நுண்ணீர்ப்பாசன முறையினை அமைப்பதற்கு முன்வரும் விவசாயிகளை மேலும் ஊக்குவிக்கும் வகையில், இத்திட்டத்தின் கீழ், நுண்ணீர்ப் பாசன முறைக்காக வழங்கப்படும் மானியம் மட்டுமல்லாது, குழாய்க்கிணறு / துளைக்கிணறு அமைத்தல், நீரினை இறைப்பதற்கு ஆயில் இன்ஜின் / மின்மோட்டார் வசதி ஏற்படுத்துதல், பாசன நீரினை வீணாக்காமல் வயலுக்கு

அருகில் கொண்டு செல்வதற்கு பாசனநீர் குழாய்களை நிறுவுதல், தரைநிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல் போன்ற துணை நிலை நீர் மேலாண்மைப் பணிகளுக்காகவும் கூடுதல் மானியம் வழங்குவதற்கு மாண்புமிகு அம்மாவின் அரசு உத்தரவிட்டுள்ளது.

அதன்படி,

- நிலத்தடி நீர் பாதுகாப்பான ஆழத்தில் உள்ள குறுவட்டங்களில் குழாய்க்கிணறு / துளைக்கிணறு அமைப்பதற்கு செலவிடப்படும் தொகையில் 50 சதவிகிதம் அல்லது அதிகபட்சமாக ரூ.25,000/-மும்;
- டீசல் பம்பு செட் / மின் மோட்டார் பம்புசெட் நிறுவுவதற்கு அதன் விலையில் 50 சதவீதத் தொகை ரூ.15,000/-த்திற்கு மிகாமலும்;
- வயலுக்கு அருகில் பாசன நீரினை கொண்டு செல்லும் வகையில் நீர்பாசன குழாய் அமைப்பதற்கு 50 சதவீதத் தொகை எக்டருக்கு ரூ.10,000/-க்கு மிகாமலும்;
- பாதுகாப்பு வேலியுடன் தரைநிலை நீர்த் தேக்கத் தொட்டி நிறுவுவதற்கு ஒரு பயனாளிக்கு, அதற்காகும் செலவில் 50 சதவீதத் தொகை ஒரு கன மீட்டருக்கு ரூ.350/-க்கு மிகாமலும் நிதி உதவி ரூ.40,000/-க்கு மிகாமலும்

வழங்க ஆணையிடப்பட்டுள்ளது.

மேற்கண்ட நான்கு பணிகளில், குழாய்க்கிணறு / துளைக்கிணறு அமைக்கும் பணி, தமிழ்நாட்டில் 30 மாவட்டங்களில் நிலத்தடி நீர் பாதுகாப்பான ஆழத்தில் உள்ள 437 பாதுகாப்பான குறு வட்டங்களிலும், இதர மூன்று பணிகள் அனைத்து குறு வட்டங்களிலும் செயல்படுத்திடும் வகையில் இந்த மானிய உதவித் திட்டத்தின் வழிகாட்டு நெறிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளது.

இந்த மானியம் பெறுவதற்கு விவசாயிகள் வேளாண்மை இணை இயக்குநர் அல்லது மாவட்ட நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமையின் வேளாண்மை/ தோட்டக்கலை துணை இயக்குநர் மற்றும் உதவி இயக்குநர் அல்லது வேளாண்மை பொறியியல் துறையின் செயற்பொறியாளர் / உதவி செயற் பொறியாளர் அல்லது வட்டார வேளாண்மை அல்லது தோட்டக்கலை உதவி இயக்குநர் அலுவலகத்தினை தொடர்பு கொண்டு தங்கள் விண்ணப்பத்தினை அளித்து பெயரினை முன்பதிவு செய்து கொள்ளலாம்.

இந்த மானிய உதவித் திட்டம், **நுண்ணீர் பாசன முறையினை பின்பற்றுவதற்கு முன்வரும் விவசாயிகளுக்கு மட்டுமே வழங்கப்படும்**. முன்பதிவு செய்த விவசாயிகள் முன்பத்தியில் குறிப்பிட்டுள்ள உரிய அலுவலரிடம் தக்க பணி ஆணையினைப் பெற்று முதலில் தங்கள் சொந்த செலவில் பணிகளை மேற்கொண்டு அதற்கான கட்டண விபரங்களுடன் முழு ஆவணங்களையும் பணி முடித்தமைக்கான புகைப்படங்களுடன் சம்பந்தப்பட்ட அலுவலகத்தில் சமர்ப்பிக்க வேண்டும். இப்பணிகளை முடித்த பின்னர், நுண்ணீர்ப் பாசனத் திட்டத்தின் கீழ் விவசாயிகள் வேளாண்மை அல்லது தோட்டக்கலை அலுவலகங்களை தொடர்பு கொண்டு, நுண்ணீர்ப்பாசன முறைக்கான மானியங்களையும் பெற்றுக் கொள்ள முடியும். தமிழ்நாடு அரசின் தோட்டக்கலைத் துறை நுண்ணீர்ப் பாசன அமைப்பின் தரம் மற்றும் விலையின் அடிப்படையில் அங்கீகரிக்கும் நுண்ணீர்ப் பாசன நிறுவனங்களுக்கு அதற்கான 60 சதவீத மானியத் தொகை விடுவிக்கப்பட்ட 15 நாட்களுக்குள் இத்துணை நீர்மேலாண்மைக்கான மானியத் தொகை முழுவதும் விவசாயிகளின் சேமிப்பு கணக்கில் நேரடியாக வரவு வைக்கப்படும்.

பெரிய விவசாயிகளுக்கு இணையாக, சிறு, குறு விவசாயிகளும் கூட தங்களது நிலத்திற்கு ஏற்ற சாகுபடியினை எவ்விதத் தொய்வும் இன்றி பெற வேண்டும் என்ற உயரிய எண்ணத்தில், மாண்புமிகு அம்மாவின் அரசினால் கொண்டு வரப்பட்ட இத்திட்டத்தினை வேளாண் பெருமக்கள் பெருமளவில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என தமிழ்நாடு அரசு கேட்டுக் கொள்கிறது.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**